## பெயர்கள்

1. சர்வதேச சோசலிச தமிழர் பேரவை
2. அனைத்து ஒடுக்குமுறைகளுக்குமெதிரான ஈழத் தமிழர் அமைப்பு
3. சர்வதேச தமிழர் சோசலிச கூட்டமைப்பு
4. ஜனநாயகத்துக்கும் சோசலிசத்துக்குமான ஈழவர் அமைப்பு
5. சர்வதேச சோசலிச ஜனநாயக தமிழர் அமைப்பு
6. சகல ஒடுக்குமுறைக்குமெதிரான சர்வதேச தமிழர் பேரவை
7. ஜனநாயக ஈழ தமிழர் அமைப்பு

## 1. இலக்கு

1. பூரண இறைமையுள்ள சுதந்திர தமிழீழ குடியரசை அமைப்பது. இக்குடியரசு பூரண சுதந்திரமாக வாழ்வதோ அன்றி கூட்டமைப்பாக வெவ்வேறு குடியரசுகளுடன் வாழ்வதோ என்பது ஈழ குடியரசின் முடிவாகும்

2. அடக்கப்படுகின்ற வர்க்கங்கள், சமூக சக்திகளின் தலைமையை ஏற்படுத்தி சோசலிச புரட்சியை தமிழீழத்தில் கொண்டு வருதல்.

3. தமிழீழத்தில் கூட்டுறவு முறைமிலும், தனிப்பட்ட முறைமிலும் அரசியல், பொருளாதார, சமூக ரீதியில் பூரண ஜனநாயகத்தை பேணுதல்.

4. சர்வதேச ரீதியில் அனைத்து முற்போக்கு ஜனநாயக சக்திகளுக்கும் ஆதரவளிப்பது, சர்வதேசிய புரட்சியை நோக்கி முன்னேறுவது.

## 2. அடிப்படைக் கொள்கை

### தமிழீழ குடியரசை நிறுவுதல்

அ) கடந்த கால வரலாறு எமக்கு கற்பித்த பாடங்களின் காரணமாகவும், சிங்கள சோவனிசம் எவ்வாறு மேலும் மேலும் சிங்கள மக்களிடையே வேரூன்றி வருகின்றது என்பதினை தெளிவாக அறிந்த காரணத்தினாலும், தமிழீழ தேசியத்தின் மீது திட்டமிட்ட முறையில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் தேசிய அடக்கு முறையினை உணர்ந்த காரணத்தினாலும், இன்றைய நிலையுள்ள அரசியல் அக, புற சூழலில் ஓர் பூரண இறைமையுள்ள தமிழீழ குடியரசை நிறுவுவதே தமிழ் மக்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கான ஒரே ஒரு தீர்வு.

ஆ) தமிழ் மக்கள் தேசிய சிறுபான்மையினராக இருந்து இன்று ஒரு தேசமாக உருவெடுத்துள்ளனர். தமிழ் தேசம் இன்று ஒரு சுதந்திர அரசை வேண்டி நிற்கின்றது. இதற்கு ஆதரவளிப்பது, பங்களிப்பதும் உலகில் வாழும் தமிழர்களுடைய கடமையாகும்.

இ) தமிழ் குடியரசு எவ்வாறு சோசலிச அயல் நாடுகளுடனே அன்றேல் வேறுவிதமான சமூக அமைப்பை கொண்ட அயல் நாடுகளுடனோ உறவுகளை மேற்கொள்வது என்பது (கூட்டமைப்பு, பொருளாதார ஐக்கியம், இன்னும்........) தமிழீழ மக்களின் முடிவாகும்.

ஈ) எமது உடனடி நோக்கில் ஒன்றான தமிழீழ குடியரசும், சிறிலங்கா குடியரசும் உட்பட தெற்காசிய உபகண்டத்தில் உள்ள மற்றும் மலரவிருக்கும் குடியரசுகள் கூட்டமைப்பு அமைப்பது தான் தேவையானதும் அவசியமானதும், ஆகின்றது இந்த உடனடியான நோக்கில் வேறுபட்ட சமூக அமைப்பு கொண்ட தெற்காசிய குடியரசுகளுடன் கலந்து ஆலோசிக்கத் தயாராக இருத்தல்.

## 3. சோசலிசம்

அ) அனைத்து அடக்கப்பட்ட வர்க்கங்கள், சமூக சக்திகளின் தலைமையை தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஏற்பாடுத்த வேண்டும்.

ஆ) பெண்விடுதலை, சாதிய அடக்குமுறையை ஒழித்தல், வயதுவத்தை (Agesim) எதிர்ப்பது, பாலியல் விருப்பு முறையில்

எழும் அடக்கு முறையை நிராகரித்தல் (Sexual Ovientation), பிரதேச வேறுபாட்டை ஒழித்தல், சூழலைப் பாதுகாத்தல் ஆகியன உட்பட்ட சகல அடக்குமுறைகளையும் எதிர்த்து போராடுதல்

இ) சோசலிசத்தின் அடிப்படையான மக்கள் குடியரசை தமிழீழத்தில் நிறுவுதல், சமத்துவ சமூக-பொருளாதார கூட்டமமைப்பைக் கொண்டு வருதல் இலக்காகும்.

## 4. ஜனநாயகம்

அ) தமிழீழ குடியரசில் சமூக ஜனநாயகத்தைக் கொண்டுவருதலும், அரசில் -பொருளாதார -கலாச்சார ஜனநாயக உரிமைகளைப் பேணிக் காப்பதும் கடமையாகும்.

ஆ) இதற்கு முன்பாகவே இயக்கங்கள், அமைப்புக்கள் மக்களினது ஜனநாயக உரிமைகளை (கூட்டானதும் (Collective) தனிப்பட்டதுமான (Individual) மனித உரிமைகளை) மீறக்கூடாது

இ) எமது சர்வதேசக் கூட்டமைப்பில் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள கிளைகளினது சுயமுயற்சிகளும், அதில் உள்ள தனிப்பட்ட அங்கத்தவர்களினதும் ஜனநாயக உரிமைகளும் மறுக்கப்படக் கூடாது.

5. சர்வதேச நிலை

அ) நீண்ட கால நோக்கம் சோசலிச தமிழீழ குடியரசு தெற்காசிய உபகண்டத்தின் சோசலிசக் குடியரசுகளுடன் ஒரு கூட்டமைப்புக்குள் வருதல். இந்த நோக்கத்துடன் தெற்காசியாவில் நடக்கும் அனைத்து தேசிய விடுதலை, சோசலிசப் போராட்டங்களுக்கும், அடக்குமுறைக்குமெதிரான அனைத்து வகைப் போராட்டங்களுக்கும் அதரவு அளிப்பது.

ஆ) நீண்ட கால நோக்கில் ஒன்றான உலக ரீதியிலான சோசலிசக் கூட்டமைப்பை உருவாக்குவதே (Confederation of Socialist Nations)

இ) சர்வதேச ரீதியாக நடக்கும் தேசிய விடுதலைப்போராட்டங்கள், சோசலிச, ஜனநாயக, பெண்விடுதலை, பாலியல் அனுகுமுறை உரிமை, சூழலைப் பாதுகாப்பது, நிற, சமயவெறிகட்கு எதிரான போராட்டங்கள் உட்பட அடக்குமுறைக்கெதிரான அனைத்து போராட்டங்களுக்கும் ஆதரவு அளிப்பது.

## முடிவுரை

அ) மேற்கண்ட அடிப்படைக் கருத்துக்களை ஏற்றுக்கொண்டவர்கள் தாமிருக்கும் நாட்டிலோ, பிராந்தியத்திலோ, கிளைகள் அமைத்துக் கொள்ளுவதும் அன்றேல் தனிப்பட்ட முறையிலோ, ஏற்கனவே இருக்கும் குழு அடிப்படையிலோ இந்த சர்வதேசக் கூட்டமைப்பில் இணைந்து கொள்ளுதல்.

ஆ) இது ஒரு அடிப்படைக் கொள்கையில் இணைவதற்காகத் தயாரிக்கப்பட்டதாகும். இதனைச் செழுமைப்படுத்துவதற்காகவும் எதிர்கால வேலைத் திட்டங்களை ஏற்படுத்திக்கொள்ளுவதற்காகவும் இன்னும் மோத காலத்தில் சர்வதேச மகாநாடு ஒன்றினைக் கூட்டலாம். அதன் பின் ஒவ்வொரு வருடமும் நாம் கூடலாம். ஒருவரையொருவர் நேரடியாகச் சந்திப்பது நம்மிடையே புரிந்துணர்வை ஏற்படுத்துவதுடன் கருத்து ரீதியாகவும் வளம்பெற வாய்ப்புக்களை உருவாக்கும்.

இ) இவ்வாறான முதலாவது மகாநாடு நடைபெற முன்னரே நாம் கடிதம் மூலமும், தொலைபேசி மூலமும் எமது உறவுகளை வளர்த்துக் கொள்ளலாம். உடனடியாக சர்வதேசக் கூட்டமைப்பு உருவெடுத்ததினை வெளிப்படையாகத் தெரிவித்து கிளைகளாகவோ தனிப்பட்ட முறையிலோ தம்மை இணைத்துக் கொள்ளலாம்.

ஈ) எந்த நாட்டில் எம்மவர்களுக்கு வேலைசெய்யும் தன்மைகள், பொருளாதார வசதிகள் அதிகம் உண்டோ அந்த நாட்டில் நம் தலைமைச் செயலகத்தை அமைத்துக் கொள்ளலாம்.

உ) உடனடியாக கூட்டமைப்புச் சார்பில் பொதுப்பத்திரிகை, சஞ்சிகை கொண்டுவருதல் பற்றி யோசிக்கலாம்.

ஊ) வேலைகளைப் பிரித்தெடுத்தும், மையப்படுத்தியும் கொள்ளலாம் இதனால் ஒரே வேலையை திருப்பித் திருப்பி வெவ்வேறு நாடுகளில் செய்யாது எமது வசதிகளை கூடியளவு சிறப்பாக செய்யலாம்.

முற்றும்.

(இது சம்பந்தப்பட்ட சகல கருத்துக்களையும் உங்களிடம் இருந்து எதிர்பார்க்கிறோம்)